Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 102

புதன்கிழமை 08 மார்ச் 2023

மாசி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50
பக்கங்கள் 16

## ஆட்டிறைச்சியின் எலும்பு பெண்ணுக்கு எமனானது!

தொண்டையில் சிக்கியதால் குருதிவாந்தி எடுத்து சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 8
ஆட்டிறைச்சி எலும்பு மார்பு குருதிக் குழாயில் சிக்கிக் கொண்ட »15

வவுனியாவை உலுக்கிய சம்பவம்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலங்களாக மீட்பு

## கொலையா? தற்கொலையா?

## கழுத்து நெரிக்கப்பட்ட அடையாளம்

வவுனியா, மார்ச் 8

வவுனியா குட்செட் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களின் கழுத்துக்களில் நெரிக்கப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன. எனவே அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். ஆயினும் பிள்ளைகளையும், மனைவியையும் கொன்றுவிட்டு கணவர் தற்கொலை செய்திருக்கவும் சந்தர்ப்பம் உண்டு எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். »15



## இந்தமாத இறுதிக்குள் நாணயநிதிய உதவி!

இணக்கப்பாட்டுக் கடிதத்தை சமர்ப்பித்தது இலங்கை

விரிவு:- பக்.15

## ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலாம்!

திறைசேரியுடன் கலந்துரையாடாமலேயே தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8
உள்ளூராட்சித் தேர்தல் திகதியைத் தீர்மானிப்பது தொடர்பான கலந்துரையாடலுக்கு »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறையினர் இன்று தொழிற்சங்கப் போராட்டம்!

**முல்லைத்தீவு, மார்ச் 8**
**நாடு தழுவிய ரீதியில் சுகாதாரத் துறையினர் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.**

சுகாதாரத் துறையைச் சேர்ந்த வட மாகாணத்தில் உள்ள மருத்துவர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோரும் இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதனால் வடமாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சுகவீன விடுமுறை போராட்டம் இன்று புதன்கிழமை முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,19)

## பணியாளர்கள் வெற்றிடம் ரயில் சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 8
தொடருந்து இயந்திர சாரதிகளுக்கான வெற்றிடம் காரணமாக வார இறுதி நாள்களில் தொடருந்து சேவைகள் ரத்துச் செய்யப்படலாம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதிகள் இன்மையால் நேற்றுமுன்தினம் 24 தொடருந்து சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. அவற்றில் கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் தொடருந்தும் அடங்குகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறையாகும் வகையில் அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 60 ஆக அரசாங்கம் அறிவித்தது.

அதன் காரணமாக புகையிரதசேவை பணியாளர்கள் அதிகளவில் ஓய்வுபெற்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்தால் சில ரயில் சேவைகள் முடங்கியுள்ளன.

அவர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடவுள்ளோம் என ரயில்வே திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த பொருள்கள் தமிழகத்தில் மீட்பு


சென்னை, மார்ச் 8
தமிழகத்தின் இராமநாதபுரம் அருகே இலங்கைக்குக் கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த அழகு சாதனப் பொருள்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் அருகே தேவிபட்டணத்தில் இலங்கைக்குக் கடத்துவதற்குக் கொண்டு வரப்பட்ட 450 கிலோ பூச்சிக் கொல்லி மருந்துகள், 125 அழகு சாதனப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் கடலோரப் பாதுகாப்பு குழும பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,113)

# முட்டைக் கப்பல் வருகை தாமதம்

### வர்த்தக அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 8
இந்தியாவிலிருந்து முட்டைகளை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் முட்டையின் விலையுயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்கமைய 2 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவிலிருந்து முட்டைகளை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அந்த நாட்டுக் கால்நடைப் பிரிவு ஊடாகக் கிடைக்க-வேண்டிய அறிக்கை மேலும் தாமதமடைவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

உரிய அனுமதி கிடைத்தவுடன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும். எதிர்வரும் பண்டிகைக் காலம் முடிவடையும் வரை பல கட்டங்களாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 40 ரூபா அல்லது அதற்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சு மேலும் குறிப்பிட்டது. (ச-இ)

## கணவன் தாக்கி மனைவி காயம்

சாவகச்சேரி, மார்ச் 8
பாளைக் கத்தியால் கணவன் தாக்கியதில் காயங்களுக்குள்ளான மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கெற்பேலி மத்தியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காலையில் தொழிலுக்குப் புறப்பட்ட வேளையில் கணவன், மனைவிக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றியதில் கணவன் பாளைக் கத்தியை எடுத்து மனைவியைத் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் மனைவி முதுகுப்பகுதியில் வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அதன்பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-14,9)

## அதிவேக அஞ்சல் சேவை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்.பிரதம தபாலகம் உள்நாட்டு அதிவேக அஞ்சல் சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த அதிவேக அஞ்சல் சேவை தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நடவடிக்கை யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் எந்தப் பாகத்தில் உள்ளோருக்கும் கடிதம் மற்றும் பெறுமதிமிக்க பார்சல்களை இந்த அதிவேக அஞ்சல் சேவை ஊடாக அனுப்பிவைக்க முடியும். இதில் 40 கிலோவுக்கு உட்பட்ட பொருள்களை அனுப்பலாம்.

அனுப்பிவைக்கப்படும் பொருள்களை உரியவர்கள் உடனே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-17)

# போதைப்பொருள் கடத்தல் செய்த எண்மர் மடஸ்காரில் கைது

கொழும்பு, மார்ச் 8
தலைமறைவாகியிருந்த இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர்களான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன, குடு சாலிந்து உள்ளிட்ட 8 பேர் மடஸ்காரிலுள்ள இவாட்டோ சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடகஸ்காரின் முன்னணி ஊடக வலையமைப்பு ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஹரக் கட்டா உள்ளிட்டோர் கடந்த மாதம் மடகாஸ்கரின் சுற்றுலா தீவொன்றுக்கு பிரத்தியேக ஜெட் விமானம் ஒன்றின் மூலம் வந்திறங்கினர். மறுநாள் உள்ளூர் விமானம் ஒன்றின் மூலம் அவர்கள் அன்டனானாரிவோ நகரைச் சென்றடைந்து இவாட்டோ நகரிலுள்ள பெரிய ஹொட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

பின்னர் கடந்த முதலாம் திகதி மடஸ்காரிலிருந்து வெளியேறுவதற்காக அன்டனானாரிவோவின் இவாட்டா விமான நிலையத்துக்கு இரு கார்களில் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச காவல்துறையின் சிவப்பு அறிவிப்பின்படி அவர்கள் தேடப்பட்டு வரும் நிலையில் மடகஸ்கார் பாதுகாப்புப் படையினரால் அடையாளம் காணப்பட்டதையடுத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சஜித்தை சந்தித்தார் நியூஸி. தூதுவர்

கொழும்பு, மார்ச் 8
இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நியூஸிலாந்து தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் தொடர்பாகவும் சஜித் சந்திப்பில் சுட்டிக்காட்டினார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியை இனி வழங்காவிடின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

## நிதியமைச்சுக்கு விஜித எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 8**

**தேர்தலுக்காக வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதியை விடுவிக்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் நிதியமைச்சுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதற்கமைய நிதியமைச்சு நிதியை விடுவிக்கவேண்டும். இல்லாவிடின் நீதிமன்ற உத்தரவை அவமதித்த குற்றத்துக்கு ஆளாக நேரிடும்.**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்தும் திகதியை அறிவிக்காமல் இருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிப்பதை மேலும் தாமதிக்காமல் உடனடியாக திகதி அறிவிக்கப்படவேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு ஒதுக்கிய நிதியை விடுவிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அதனால் தற்போது நிதியை விடுவிக்காமல் இருக்க நிதியமைச்சால்முடியாது. நீதிமன்ற உத்தரவுக்கு நிச்சயம் கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

நிதி அமைச்சின் செயலாளர், அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் பிரதானி ஆகியோருடன் கலந்துரையாடிக்கொண்டிருக்க எந்தத் தேவையுமில்லை.

இனியும் நிதி விடுவிக்காதுவிடின் நீதிமன்ற உத்தரவை மீறியதாகத் தெரிவித்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கமுடியும்.

தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கும் பொறுப்பு உடனடியாகத் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதாகும்.

அதனால் உடனடியாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலைகள் நடத்துவதற்கான திகதியை தேர்தல் ஆணைக்குழு பிரகடனப்படுத்த வேண்டும். அது ஆணைக்குழுவின் பொறுப்பாகும் - என்றார். (ச-இ)

## அரச நிதி குழுத் தலைவர் நியமனம் இழுபறியில்!

கொழும்பு, மார்ச் 8

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க விலகியுள்ள நிலையில் அந்தக் குழுவின் பதில் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவு கடந்த வியாழக்கிழமை கூடியபோதே வஜிர அபேவர்த்தன தலைமையில் கூட்டம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆளும் கட்சியால் பரிந்துரைக்கப்பட்ட மயந்த திஸாநாயக்க, அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அதேநேரத்தில் எதிர்க்கட்சி கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை அந்தப் பதவிக்கு ஏற்கனவே முன்மொழிந்திருந்தது.

அதனால் எழுந்த சர்ச்சைகள் மற்றும் விமர்சனங்களையடுத்து, அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக மயந்த திஸாநாயக்க அறிவித்தார். அவரது பதவி விலகல் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவும் நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு கடந்த வியாழனன்று கூடியது. தலைவர் ஒருவரை தெரிவு செய்யாமல் இந்தக் குழுவை கூட்டுவது அரசமைப்புக்கு முரண் என்றும், அதனால் தலைவர் தெரிவு செய்யப்பட்ட பின்னரே கூட்டப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதற்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தலைமையில் கூட்டம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

பதில் தலைவரை நியமித்து கூட்டப்படுவது சட்டவிரோதம் எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா மற்றும் சந்திம வீரக்கொடி ஆகிய இருவரும் வெளிநடப்புச் செய்தனர் எனவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## பீரிஸை நீக்கினால் சட்ட நடவடிக்கை!

### சன்ன ஜயசுமன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பதவிநீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ஜி.எல்.பீரிஸ் நீக்கப்படுவார் என்பது வேடிக்கையானது. சுயாதீன தரப்பினரை அரசியல் மட்டத்தில் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளின் வெளிப்பாட்டே இது.

கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக தன்னிச்சையாகச் செயற்படும் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடரப்படும் - என்றார். (ச-இ)

## பதவியிலிருந்து நீக்குவதாயின் சட்டபூர்வ அறிவிப்பு வேண்டும்

### ஜி.எல்.பீரிஸ் உடும்புப்பிடி



பொதுஜன பெரமுனக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து என்னை விலக்குவதாயின் முதலில் எனக்கு அறிவிக்கவேண்டும். இது தொடர்பில் சட்டபூர்வமான அறிவித்தல் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நீக்குவதற்கு கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என மொட்டுக் கட்சியின் செயலாளர் அண்மையில் அறிவித்தார்.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வினவியபோதே ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் சுயாதீன தரப்பினரை அரசியல் மட்டத்தில் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் சிறிலங்கா பொதுஜன பெரமுன ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

"என்னைப் பதவியிலிருந்து விலக்குவதாக இருந்தால் அதுபற்றி முதலில் எனக்குத்தான் அறிவிக்கவேண்டும். அவ்வாறு எந்தவொரு கடிதமும் எனக்குக் கிடைக்கப்பெறவில்லை. இல்லாத ஒன்றுக்கு கற்பனை அடிப்படையில் பதில் வழங்க முடியாது - என்றார். (ச-44)

## கடந்த இரண்டு மாதங்களில் 330 மில். அமெரிக்க டொலர்

### சுற்றுலாத்துறை ஈட்டியது

கொழும்பு, மார்ச் 8

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் சுற்றுலாத்துறை மூலம் 330 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் மட்டும் 170 மில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலாத்துறையில் கிடைக்கப்பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக வருடத்தின் முதல் இரு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் தாண்டியுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் மற்றும் போராட்டங்களால் சுற்றுலாத்துறை கடுமையாக வீழ்ச்சியடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சப்ரகமுவ பல்கலை மீள ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 8

காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 16 ஆம் திகதி பல்கலை முகாமைத்துவ பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் குழுவுக்கும் மற்றுமொரு மாணவர்கள் குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலையடுத்து பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்த நிலையில் சிரேஷ்ட மாணவர்களுக்கு மட்டும் நேற்று முதல் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏனைய பீடங்கள் ஆரம்பாகும் தினம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் பல்கலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (எ-14,இ)

## சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

### நாளை கூடுகின்றது அரசமைப்புப் பேரவை

கொழும்பு, மார்ச் 8

தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அரசமைப்புப் பேரவை நாளை வியாழக்கிழமை கூடவுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் தொடர்ந்து பிற்போடப்பட்டு வருகின்றமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்துக்கமைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசமைப்புப் பேரவை முன்னெடுத்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் நியமனத்துக்கான விண்ணப்பம் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கோரப்பட்டது. சிவில் பிரஜைகளிடமிருந்து சுமார் 2 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதற்கமைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது உட்படப் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானிக்க எதிர்பார்க்கிறோம் என சபாநாயகர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.பொறுமை அவசியம். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள்.நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளை சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் இருப் பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டியநாள். தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் தவிர்க்கவும். சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:** மனதில் அவ்வப்போது சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமை அவசியம். எதிர்பார்த்த தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

# இரு குற்றச்சாட்டுகளில் 6 சந்தேகநபர்கள் கைது!

கிளிநொச்சி, மார்ச் 8

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் மற்றும் கல்மடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு, உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டுகளில் 6 சந்தேகநபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் மற்றும் கல்மடு பகுதியில் சட்டவிரோதமாக டிப்பர் வாகனம் மற்றும் இரு உழவு இயந்திரங்கள் மூலம் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அதேவேளை, அன்றைய தினம் வீதிச் சோதனையின் போது உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 5 கிராம் 50 மில்லிகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ-14,113)

# வெளிநாட்டுச் சிகரெட்டை விற்பனை செய்தவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 8

வரி செலுத்தாமல் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட சிகரெட்டை விற்பனை செய்த நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டார் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குட்டியப்புலம் பகுதியில் வீடொன்றில் வைத்து விற்பனை செய்தபோது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட 29 வயதான சந்தேகநபரிடமிருந்து ஒரு பெட்டி சிகரெட் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பலாலி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-14.23)

# அரச ஊழியர்களின் காணி தொடர்பில் தகவல் கோரல்

வவுனியா, மார்ச் 8

அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தகவல் கோரப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்குக் காணி வழங்குவதற்காக ஓமந்தைப் பகுதியில் 2010 ஆம் ஆண்டளவில் அரச ஊழியர் வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. அதன் போது சுமார் 700 க்கும் மேற்பட்ட காணித்துண்டுகள் அரச ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. தற்போது மேலும் 219 பேருக்கு காணித்துண்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கான பயனாளிகள் தெரிவுப் பட்டியல் வவுனியா பிரதேசசெயலகத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பான முறைப்பாடுகள் இருக்கும் பட்சத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன் தெரியப்படுத்துமாறு பிரதேசசெயலாளரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரச ஊழியர்களிடம் பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதா எனவும் தகுதியானவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதா என்ற விடயம் தொடர்பில் அறிவதற்காக ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த நபரொருவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாகத் தகவல்களைக் கோரியுள்ளார்.

அதன்படி விண்ணப்பத்தில் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்ட முறை? விண்ணப்பம் விளம்பரப்படுத்தியமைக்கான சான்று, விண்ணப்பம் கோரியகாலப்பகுதி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை உட்படப் பல்வேறு விடயங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டுள்ளன. (ம-14,110)

# கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 8

புத்தூர் வாதரவத்தை பெரிய பொக்கணைப் பகுதியில் கசிப்புடன் குடும்பத்தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தனர். காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி அசேல தலைமையிலான பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 42 வயதுடைய நபர் எனவும் சந்தேகநபரின் உடமையில் இருந்து 30 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்றும் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ம-14,23)

# நாட்டில் பராமரிப்பின்றி 10 லட்சம் வாகனங்கள்!

*வாகன பழுதுபார்ப்புத்துறை தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 7

நாடு முழுவதும் பழுதுபார்ப்பு மற்றும் சேவைகளுக்கு பணம் இல்லாததனால் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட 10 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் இயங்க முடியாத நிலையில் உள்ளன என வாகன பழுதுபார்ப்பு துறை தொடர்பான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் வாகன சேவை வழங்குநர்கள் தெரிவிக்கையில்,

வாகன உதிரிப்பாகங்கள் விலை இருமடங்காகியுள்ளது. பல வாகனங்களில் உதிரிப் பாகங்களின் பயன்பாடு வெகுவாகக் குறைந்துள்ளது. அதற்கமைய நாட்டில் 10 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் இயங்க முடியாத நிலையிலுள்ளன - என்றனர். (ச-இ)

# நகைக்கொள்ளையில் ஈடுபட்டவர்கள் கைது

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, நுணசை சிவன்கோவிலில் அண்மையில் நடைபெற்ற உற்சவத்தின்போது நகைக்கொள்ளையில் ஈடுபட்ட குழுவொன்று கைதுசெய்யப்பட்டுள்ளது என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் வந்த இந்தக் குழு, ஆலயத்துக்கு வந்த [illegible] கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. [illegible] ரூபா பெறுமதியான சங்கிலியொன்று அவர்களால் கொள்ளையிடப்பட்டது. இது தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே இந்தக் குழு இளவாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டது.

இரு பெண்கள் ஒரு ஆண் என மூவர் அடங்கிய இந்தக் குழுவில் ஒரு பெண் தலைமறைவாகியுள்ளார். ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 26 வயதுடைய ஆண், 43 வயதுடைய பெண் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இனிமேல்தான் உண்மையான நெருக்கடி

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இந்த மாத இறுதிக்குள் கிடைக்கும் என்று நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதுவரை ஏய்த்துக் கொண்டிருந்த சீனா, கடன் மறுசீரமைப்புக் கடிதத்தை வழங்கியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆண்டு இலங்கை பொருளாதார நெருக்கடிச் சூழலுக்குள் சிக்கியதில் இருந்து, இலங்கையர்கள் அதிகம் உபயோகிக்கும் ஒருசொல் சர்வதேச நாணய நிதியம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கையர்களின் ஒரே நம்பிக்கையாக சர்வதேச நாணய நிதியம் உருவகிக்கப்பட்டது. ஆனால், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறும் உதவி, மலர்ப்பாதையாக இருக்கப்போவதில்லை என்ற உண்மை சாதாரண மக்கள்பலருக்கும் தெரிந்திருக்கவாய்ப்பில்லை.

கிடைக்குமா? கிடைக்காதா? என்ற நிலைமையில் இருந்த சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இப்போது கிடைக்கும் என்ற நிலைமையை அடைந்திருக்கின்றது. இலங்கை மத்தியவங்கி ஆளுநரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கையெழுத்திட்ட இணக்கப்பாட்டு ஆவணம் சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. 'சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்துவிட்டது, இனி நாட்டின் நெருக்கடி பஞ்சாகிப் பறந்துவிடும்' என்று நினைத்தால் அதைவிட மடமைத்தனம் வேறில்லை.


சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளுக்கான இணக்கப்பாட்டை அடைவதற்கு இலங்கை பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்தநேரிட்டது. மின்சாரக் கட்டணம், பெற்றோலிய விலை என்பன நியாயமற்ற வகையில் அதிகரிக்கப்பட்டன. அதைவிட, மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதி செய்தல், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துதல், பொது நிறுவனங்களை மறுசீரமைத்தல், சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல், அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் என முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. சுருங்கச் சொன்னால் நாணயநிதியத்தின் தாளங்களுக்கு அரசாங்கம் ஆடிக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் நொடிந்து போயிருக்கும் மக்களை இன்னமும் நெருக்கடிக்குள் தள்ளின. இவற்றால் நாட்டில் மீண்டும் போராட்டங்களும் வெடிக்க ஆரம்பித்திருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துக்கும், இலங்கைக்குமான உடன்படிக்கை பகிரங்கப்படுத்தப்படாத நிலையில், இன்னும் பல சீர்திருத்தங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பது நிச்சயம். அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இலங்கைக்குக் கிட்டாது. நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த 16 சந்தர்ப்பங்களில் செய்துகொண்டதைப் போலன்றி, இம்முறை ஒப்புக்கொண்டதை கட்டாயமாகச் செய்யவேண்டும் என்று கூறியிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சர்வதேச நாணய நிதிய உதவிகள் கிடைக்கும் பட்சத்தில், அரசாங்கம் இன்னமும் கடுமையான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டியிருக்கும். ஆரம்ப நடைமுறைகளின் தாக்கத்தையே சாதாரண மக்களால் தாங்கிக்கொள்ள இயலாத நிலையில், இனிவரும் அழுத்தங்களை எவ்வாறு நாடு எதிர்கொள்ளப் போகின்றது என்பது ஒரு விடை தெரியாத கேள்வியே.

### நாளொரு நல்வார்த்தை

"பணிவு வேண்டும்; ஆனால் கோழைத்தனம் கூடாது. துணிவு வேண்டும்; ஆனால் தலைக்கனம் கூடாது"
– சோக்ரட்டிஸ்



# இலங்கையின் மீட்சிக்கு அமெ. ஆதரவு வழங்கும்

## அந்த நாட்டின் திறைசேரிச் செயலர் உறுதியளிப்பு



கொழும்பு, மார்ச் 8

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை நோக்கி முன்னெடுத்துள்ள திட்டங்களுக்கு கடன் வழங்கும் நாடாக அமெரிக்கா என்றும் ஆதரவளிக்கும் என அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளர் ஜனெட் எல் ஜெலென் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று தொலைபேசி மூலம் மேற்கொண்ட உரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் கடன் வழங்குநர்களிடையே உத்தியோகபூர்வ ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவை வரவேற்கிறோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை நோக்கி இலங்கை முன்னெடுத்துள்ள திட்டங்கள் - பொருளாதார சீர்திருத்தங்கள் - உறுதியான மீட்சிக்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு அமெரிக்கா ஆதரவை வழங்கும்.

இலங்கைக்கு கடன்வழங்கியவர்களை சமமாக வெளிப்படையாக கையாள்வது குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பை அமெரிக்கா வரவேற்கிறது என அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# நலன்புரிக் கொடுப்பனவுக்களை குறைப்பதற்கு அரசு திட்டம்!

## தொழிற்சங்க சம்மேளனம் தகவல்

கொழும்பு, மார்ச் 8

சமுர்த்தி உள்ளிட்ட ஏனைய நலன்புரிக் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகிறது என்று அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் பி. ஏ. பி. பஸ்நாயக்க தெரிவித்துள்ளதாவது:

சமூக நலன்புரிக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கொடுப்பனவுகளை நூற்றுக்கு 75 வீதமாகக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன - என்றார். (ச-இ)

### நாளை

09.03.2023
வியாழக்கிழமை
மாசி 25

சுபநேரம் : 07.54 - 09.24
ராகுகாலம் : 01.54 - 03.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு உத்தரவாதத்துடன் கால்பதிக்கின்றது 'நொதேர்ன்யுனி'

'நொதேர்ன்யுனி' (NorthernUni) மற்றும் சிலிட் (SLIIT) யாழ்ப்பாணத்தில் உலகத்தரம் வாய்ந்த வளாகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையினுடைய மிகப்பெரிய அரச சார்பற்ற பட்டப்படிப்பை வழங்குகின்ற நிறுவனமான சிலிட்னுடைய கூட்டமைவானது, 'நொதேர்ன்யுனி' ஊடாக இலங்கையின் பிரபல்யமான தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ கற்கைகளை யாழ். மண்ணில் வழங்கவிருக்கின்றது.



**நாங்கள் ஏன் யாழ்ப்பாணத்தில்?**

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 2020ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் மொத்தச் சேர்க்கை விகிதமானது அதிகமாகக் காணப்படுகிறது. கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கைகளுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாணவர் சேர்க்கை ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளது.

2018 - 2020 காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து கூட்டு வருடாந்த வளர்ச்சி வீதமானது முறையே 30 சதவீதம் மற்றும் 40 சதவீத மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது. இக்கூற்றானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாணவர்களின் கல்வி வளம், மற்றும் அபிலாசைகளை சுட்டிக்காட்டுகிறது.



அமையவுள்ள
பல்கலைக்கழகத்தின் மாதிரி

இதனோடு மேம்பட்ட பொருளாதார சூழல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நிலப்பரப்பு, கணினி விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் என்பன இத்துறைகளில் தொழில்களை தொடர மாணவர்களின் அபிலாசைகளை அதிகரித்துள்ளது.

எப்படியிருப்பினும் அரச பல்கலைக்கழகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான உள்வாங்கல்களைக் கொண்டிருப்பதால், உயர் தகுதி வாய்ந்த அதிகளவான மாணவர்களுக்கு நியாயமான கட்டணத்துடன் உயர்கல்வி வாய்ப்புக்களை அணுக முடியாதுள்ளது. 2020 ஆம் ஆண்டின் புள்ளிவிவரம் இதற்கான கதைகளை விபரிக்கின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெறுமனே 200 மாணவர்கள் மாத்திரமே அரச பல்கலைக்கழகங்களில் கணினி விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைகளில் சிறப்புப்பட்டங்களை பயிலமுடியும்.

அனைத்து மாணவர்களையும் 'நொதேர்ன்யுனி' அங்கீகரித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் மற்றும் நேரடி அனுமதி பெற்ற சிலிட்டினுடைய 4 வருட பட்டப்படிப்புக்களை யாழ்ப்பாணத்தில் வழங்குகிறது.

யாழ்ப்பாண நகரின் மையப்பகுதியில் இதன் வளாகமானது அமைந்துள்ளது. 'நொதேர்ன்யுனியானது' தகவல் தொழில்நுட்ப கற்கையின் 7 சிறப்புப்பட்டங்களையும் வணிக முகாமைத்துவத்தின் 4 சிறப்புப் பட்டங்களையும் வழங்குகிறது. மாணவர்களுக்கான சிறப்பு புலமைப்பரிசில் திட்டங்களும் இங்கு காணப்படுகின்றன.

அடுத்த சில ஆண்டுகளில், 'நொதேர்ன்யுனி' பொறியியல், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற துறைகளையும் உள்ளடக்குவதோடு 10 ஆயிரம் மாணவர்களை உள்வாங்கக் கூடிய வகையில் வடிவமைப்பதற்கான திட்டத்தைக் கொண்டுள்ளது.

எந்த ஒரு மாணவனுக்கும் வேலைவாய்ப்பு இல்லாத கல்வி என்பது பாதிப் பயணம் மட்டும்தான். 'நொதேர்ன்யுனி' தொழிற்றுறை தொடர்பான செயற்றிட்டங்கள் மற்றும் அதன் வழிகளை மட்டும் வழங்கவில்லை. ஆனால், திறன் மேம்பாட்டுக்கான திட்டவரைவு மற்றும் மொழி, வேலைவாய்ப்புக்கான வேலைத்தள நன்நடத்தை பயிற்சிகள் என்பனவற்றையும் வழங்குகின்றது. 'நொதேர்ன்யுனி' அதன் வலுவான தொழில் ரீதியான தொடர்புகள் மற்றும் அதன் சொந்த நிறுவனமான 'மஜிக்ரெக்' (MagickTech) ஊடாக மாணவர்களுக்கு தொழிற்றுறை தொடர்புகள், உள்ளகப் பயிற்சி மற்றும் தொழில்வாய்ப்புக்களை வழங்குகிறது. 'மஜிக்குறூப்பானது' சிலிட் நிறுவனத்துடன் இணைந்து கல்வி மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதன் மூலம் வடக்கு பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சமூகபொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதனையும் தகவல் தொழில்நுட்ப சேவை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டுக்கான இடமாக பிராந்தியத்தை மேம்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

'மஜிக்குறூப்பானது' 30வருட கால அனுபவத்தை கொண்டு வீட்டின் உட்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள், சேவைகள் மற்றும் கல்வி என்பவற்றில் சேவையாற்றி வருகிறது. இக்குழுவானது 'மஜிக்வூட்ஸ்', 'மஜிக்ரெக்', 'மஜிக்ஹோம்' மற்றும் 'நொதேர்ன்யுனி' போன்ற அடையாளத்துடன் உலகளாவிய இருப்பைக் கொண்டுள்ளது.

சிலிட்டானது தகைமையானதும் கௌரவமானதுமானதொரு வரலாற்றை கொண்டுள்ளதோடு தெற்காசியாவின் முன்னணி 200 பல்கலைக்கழகங்கள் வரிசையில் இடம்பிடித்துள்ளது என்பதோடு இலங்கையின் க்யூஎஸ்ஸினுடைய உலகத்தரப்படுத்தல் வரிசையில் 7ஆவதாகவும் விளங்குகிறது. 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து சிலிட் அதன் அனைத்து வளாகங்கள் மற்றும் மையங்களில் கற்றலுக்கு உகந்த சூழலை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. இந்த நிறுவனமானது இரண்டு வளாகங்களை மாலபேயிலும், கொழும்பில் 4 கல்லூரிகளையும் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் 400 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இந் நிறுவனமானது தற்போது 15 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர் தொகையை கொண்டு இயங்குகிறது.




# அம்புலன்ஸ் மோதி இரு மாடுகள் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 8

வரணி பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் மோதியதில் இரண்டு மாடுகள் உயிரிழந்துள்ளன.

கொடிகாமம் எருவன்பிள்ளையார் கோவிலுக்கு 200 மீற்றர் தூரத்திலுள்ள வீதியால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 10.30 மணிக்கு நோயாளரை ஏற்றுவதற்கு அம்புலன்ஸ் சென்றுள்ளது.

வீதியின் குறுக்கே வந்த இரு மாடுகளை அம்புலன்ஸ் மோதியதில் அவை உயிரிழந்தன.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அம்புலன்ஸைக் கைப்பற்றியதுடன், சாரதியையும் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,159)



# முல்லை மருத்துவமனையில் குருதி சுத்திகரிப்பு நிலையம்

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு நிலையம், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறக்கப்பட்டது.

கனடாவில் வசிக்கும் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக 36 லட்சம் ரூபா செலவில் குருதி சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செந்தில்குமரன் தம்பதியினர் கலந்துகொண்டு சுத்திகரிப்பு நிலையத்தை வைபவரீதியாகத் திறந்தனர். செந்தில்குமரன் தம்பதியினருக்கு மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கம் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தது. (எ-14,19)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" -வள்ளுவர்



**வாய்மூலம் கொடுக்கவேண்டிய மருந்து**

வெற்றிலை- 10
மிளகு- 01 கரண்டி (10 கிராம்)
உப்பு 01 கரண்டி (10 கிராம்)
சர்க்கரை 01 கட்டி

மேற்கூறப்பட்ட பொருள்களை சேர்த்து அரைத்து நோய்வாய்ப்பட்ட மாட்டின் நாக்கில் முதலாம் நாள் 3 மணித்தியாலத்துக்கு ஒரு தடவையும் 2ஆம் நாளில் இருந்து நாள் ஒன்றுக்கு 03 தடவை என் றவாறு ஒரு கிழமைக்கு தொடர்ச்சியாகப் பூசுவதன் மூலம் இந்த நோயை விரைவில் குணமாக்கலாம். மாட்டின் வெளிப்புற உடலில் தோன்றும் கட்டி களுக்கும், வீக்கத்துக்கும் பின்வரும் மூலிகைகள் கொண்ட எண்ணெய் தயாரித்துப் பூசுவதன் மூலம் சிறந்த பயனை பண்ணையாளர்கள் பெற்று வரு கின்றனர்.

# வடமாகாணத்தில் மீண்டும் இலம்பி!

## உங்கள் கால்நடைகள் கவனம்!

மருத்துவ கலாநிதி
சுப்பிரமணியம் கஜரஞ்சன்
(கால்நடை மருத்துவ அதிகாரி)

**2020**ஆம் ஆண்டுகளில் கிளி நொச்சியில் மாடுகளில் தீவிரமாகப் பரவிய இலம்பி என்ற நோய் தற்போது மீண்டும் அதி தீவிரமாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றது. தற்போது வடக்கு மாகாணத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இந்தநோய் காணப்படுகின்றது. இந்த நோயின் தாக்கம் உள்ளூர் இன மாடுகளை விட கலப்பின மாடுகளில் அதிகமாகக் காணப்படுவதுடன் எல்லா வயது மட்டங்களையும் தாக்குகின்ற போதும் கன்றுகளில் இதன் பாதிப்பு மிக அதிகமாக இருக்கும். இதன் நோய் அரும்புகாலம் 04 - 14 நாள்கள் ஆகும். நோய்த்தாக்கம் 40 வீதமாகவும், இறப்புவீதம் 2 வீதமாகவும் உள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### நோய் அறிகுறிகள்

இந்த நோயின் பிரதான அறிகுறிகளாக காய்ச்சல், பசியின்மை, அதிக உமிழ்நீர் வெளியேறல், சளி வடிதல், கண்கள் சிவத்தல், கண்ணீர் வடிதல், உடல் தளர்ச்சி அடைதல், எடைகுறைதல், பால் உற்பத்தி குறைதல் ஆகிய ஆரம்ப அறிகுறிகளுடன் உடலின் பெரும்பாலான பகுதிகளில் தோலில் 25 சென்ரிமீற்றர் அளவுடைய கட்டிகள் உருவாகும். அத்துடன் அக அங்கங்களான வாய், மூச்சுக்குழல், குடல், சுவாசப்பை ஆகியவற்றிலும் கட்டிகள் உருவாகலாம்.

கட்டிகள் உடைந்து புண்ணாகுவதுடன் தோலில் உள்ள கட்டிகள் வெடித்துப் புண்ணாகி புளுக்கொண்ட புண்களாக மாற்றமடையும். அது மட்டுமன்றி கழுத்துப் பகுதியிலும், கால்களிலும் வீக்கம் ஏற்படும்.

இதனால் மாடுகள் நடக்க கஷ்டப்படும். அத்துடன் நிணநீர் கணுக்கள் வீங்கிக் காணப்படும்.

இந்த நோயின் நீண்டகால தாக்கமாக ஆரம்ப கால சினைப்பசுக்களில் கருச்சிதைவு ஏற்படலாம். அத்துடன் மடி அழற்சி, மலட்டுத்தன்மை என்பன ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.


### நோய் எவ்வாறு பரவுகின்றது?

இந்தநோய் நுளம்பு, இலையான், உண்ணிகள் மூலமே அதிகமாகக் கடத்தப்பட்டு தொற்று ஏற்படுகின்றது. எனினும் கால்வாய் நோய் பரவல் போன்று மனிதனாலும், வாகனங்களாலும் கடத்தப்படலாம். மேலும் மாடுகளை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டு செல்லும் போதும் மற்றும் நோய்த்தாக்கத்துக்கு உள்ளான மாடுகளின் உமிழ்நீர், சளி, பால், விந்து மூலமும் இந்தநோய் பரவலடையலாம். இந்தநோய் மனிதனில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதுடன் ஆடு, செம்மறி ஆகிய கால்நடைகளிலும் இந்தநோய் ஏற்படாது என்பதுடன் மாடுகள், எருமைகள் மட்டுமே இந்தநோயால் பாதிக்கப்படும்.

வேப்பிலை- 1 கைப்பிடி
துளசி இலை- 1 கைப்பிடி
குப்பைமேனி இலை - 1 கைப்பிடி
மருதானி இலை- 1 கைப்பிடி
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
உள்ளி (பூண்டு) - 10 பல்லு

மேற்கூறப்பட்ட பொருள்களை அரைத்துப் பின்னர் அதை அரை லீற்றர் தேங்காய் எண்ணெய்யுடன் சேர்த்து காய்ச்சி வடித்து கட்டிகளுக்கும் வீக்கத்துக்கும் பூசுவதன் மூலம் விரைவில் குணமடையச் செய்யலாம்.

மேலும் இந்த நோய்க் கடத்தலில் நுளம்பு, இலையான், உண்ணி முக்கியமான பங்கு வகிப்பதனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பின்வரும் எண்ணெய்களை சம அளவில் கலந்து பெறப்படும் கலவையை மாடுகளில் நீளப்பாட்டில் சிறிய தூரிகை கொண்டு காலை, மாலையில் கோடுகளாகக் கீறி விடுதல் மூலம் நல்ல பயனைப் பெறமுடியும்.



தேங்காய்எண்ணெய், வேப்பம்எண்ணெய், புங்கம்எண்ணெய் ஆகியவற்றை மரபு சார் மருத்துவங்களாகவும் பயன்படுத்த முடியும்.

எனவே எமது மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் இந்த வைரஸ் நோயைக் கட்டுப்படுத்துவதில் பண்ணையாளர்களின் பங்களிப்பு மிக அதிகளவில் இருக்குமாயின் எம்மால் இந்நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தமுடியும்.

### கட்டுப்படுத்த என்ன வழி?

- இது ஒரு வைரஸ் நோய் என்பதனால் வேகமாகப் பரவக் கூடியது. எனவே இந்த நோயை கடத்துகின்ற நுளம்பு, இலையான், உண்ணி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும்.
- நோய்வாய்ப்பட்ட மாடுகளை தனிமைப்படுத்தி சிகிச்சை வழங்கவேண்டும்.
- மனிதனும் இந்த நோயை காவிச் செல்லும் காவியாக இருப்பதனால் பல்வேறு தேவைகளுக்காக மாடுகளுடன் தொடர்புபடும் மனிதர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுதல்வேண்டும். கிருமி கொல்லியாக பொட்டாசியம் பேமங்கனேற்று பயன்படுத்தலாம்.
- நோய் வாய்ப்பட்ட இடங்களில் இருந்து கால் நடைகளை இடமாற்றுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.
- பால் கொள்வனவின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் பால் கான்கள், பால் சேகரிப்பு வாகனங்கள் என்பன உரிய முறையில் கிருமித் தொற்று செய்யப்படல் வேண்டும்.
- கால்நடை வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று பொருத்தமான சிகிச்சை வழங்குவதன் மூலம் இரண்டாம் நிலை தொற்றைக் கட்டுப்படுத்தி விரைவில் குணமடையச் செய்யலாம்.
- மேலும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மரபு சார் மூலிகை மருத்துவமும் முக்கியமான பங்கு வகிக்கின்றது என்பதனை பண்ணையாளர்கள் அனுபவரீதியாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைப்பீட மாணவர்களுக்கு

# யாழ். பல்கலைக்கழகத்தில் முதல்முறையாக தொழிற்சந்தை





யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான தொழிற்சந்தை முதற்தடவையாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கலைப்பீடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரிகளுக்கான உள்ளக தொழில்சார் பயிற்சிகளை வழங்கிவரும் நிறுவனங்களை அடையாளங்காணும் நோக்குடனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பட்டதாரிகளுக்கான நிரந்தர மற்றும் தற்காலிக, முழுநேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்புக்கான வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்காகவும் இந்தத் தொழிற்சந்தை நடத்தப்பட்டது. உலகவங்கியின் நிதியுதவியில் 'மேன்மைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஊடாக 'உயர்கல்வியைத் துரித வளர்ச்சிக்குட்படுத்துதல்' திட்டத்தின்கீழ் இந்தத் தொழில்சந்தை இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொழிற்சந்தையில் நாடளவிய ரீதியில் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், சபைகள், தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், ஹொட்டல்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்றுறையினர் என 65 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றன.

கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எம்.பிரதீபன், உலகவங்கியின் 'எகெட்' நிகழ்ச்சித்திட்ட கலைப்பீட இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.கபிலன், எகெட் தொழில்வளப் பயிற்சிகளுக்கான கலைப்பீட இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவகாந்தன், 'தொழிற் சந்தைக்கான வழிகாட்டுநர் சிரேஷ்ட விரிவுரையாளர் எல்.ரமணன், அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பில் 'சொண்ட்' நிறுவனப் பணிப்பாளர் எஸ்.செந்தூர்ராஜா ஆகியோரும் பங்கேற்று உரைநிகழ்த்தினர். யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக்கலை மற்றும் பொதுக்கலை பயிலும் மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக்கலைப் பட்டங்கள் பெற்று வேலைவாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகள் தொழிற்சந்தையில் பங்கேற்றனர்.



# இந்து சமயப்பேரவையின்

## விருதுவிழா 2023











இந்து சமயப் பேரவையால், ஊடக சாம்ராச்சியப் பேரரசு என்ற விருது உதயனுக்கு அண்மையில் வழங்கப்பட்டது. நெருக்கடியான பல்வேறு சூழ்நிலைகளிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சைவத்தமிழர்களின் விடிவுக்காக வீர உணர்வை வெளிக்கொண்டுவந்தமைக்காக உதயனுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

பேரவையின் நடராஜர் மண்டபத்தில் தெய்வீக இசை ஆராதனை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போதே இந்த விருது உதயன் குழுமத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, முன்னாள் இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீஸ்கந்தசாம்ப சிவ சிவாச்சார்ய சின்மமுக்கு 'சிவபூஜாக் கிரம ஜோதி' விருதும், லயஞான குபேரபூபதி விஸ்வலிங்கம் தெட்சணமூர்த்திக்கு 'லயஞான லாவண்யப் பேரரசு' விருதும், விவகார வித்வமணி என்.ஆர்.சின்னராசாவுக்கு 'சுரஞான கரவேக சிம்மம்' விருதும், கலியுக வரத சுரதாளக்கியான பாலநந்தீஸ்வரர் கே.பழனிமலைக்கு 'சுரஞான கரவேக பூமி' விருதும், வயலின் வித்துவான் இளையஞான திலகம் உருத்திராபதி இராதா கிருஷ்ணனுக்கு 'இசைஞான சக்கரவர்த்தி' விருதும் வழங்கப்பட்டது. அத்துடன் சைவத்தமிழ் எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் 'பரசமய துவம்சகோளரி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சில்ட்றன் ஒப் ஹெவின்

## ஏழ்மையின் கண்ணாடி!

சு. திலேஜா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


சில்ட்றன் ஒப் ஹெவின் (Children of heaven) எனும் திரைப்படமானது மஜித் மஜிதி இயக்கத்தில் 1197ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஈரானில் வெளிவந்த ஒரு பாரசீக மொழித்திரைப்படம் ஆகும். அலி, சாரா என்ற இரு பாத்திரங்களை வைத்தே இந்தத் திரைப்படம் நகர்ந்து செல்கின்றது. இந்தத் திரைப்பம், ஈரானில் வாழ்கின்ற வறிய நிலைக் குடும்பச் சிறுவர்களை மையப்படுத்தியதாக அமைகிறது.

ஒரு ஜோடி சப்பாத்தை வைத்து இயக்குநர் படத்தை மிக இலகுவாகக் கொண்டு சென்றுள்ளார். ஈரானின் தெற்கு தெஹ்ரோனுக்கு அருகில் வாழும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அண்ணன், தங்கைதான் அலி, சாரா. ஏழ்மையாக வாழும் சந்தர்ப்பத்தில் சாராவினுடைய சப்பாத்துக்களை அலி தொலைத்து விடுகிறான். சப்பாத்து இல்லாமல் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. அடுத்ததாக என்ன செய்வது என வறுமையின் நிலையில் யோசிக்கத் தொடங்குகிறார்கள். இறுதியில் எப்படியாவது சாராவுக்குச் சாப்பாத்து வாங்கிக்கொடுக்கவேண்டும் என்ற முடிவில், அலி ஓர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்கிறார். அதில் மூன்றாவதாக வரவேண்டும் என்பதே அவரின் இலக்கு. ஏனெனில் மூன்றாவதாக வருபவருக்கான பரிசு சப்பாத்து. இத்திரைப் படத்தில் தம்புரா வாத்தியத்தை காட்சிகளுக்கு ஆதாரமாகவும் சுருதியாகவும் இசையமைப் பாளர் ஹெய்வன் பயன்படுத்தியுள்ளார். இதில் வருகின்ற காட்சிகள், கிராமத்தின் சூழல், வீட்டின் அமைப்பு, தொழில்முறை, தாயின் நோய் வாய்ப்பட்ட நிலை என்பவற்றின் மூலம் அவர்களுடைய வறுமையை எடுத்துக்காட்டியுள்ளார்.

இத்திரைப்படத்தில் நெஞ்சைத் தொடும் விறுவிறுப்பான கட்டமாக, சாரா அலிக்கு சப்பாத்தைக் கொடுப்பதற்காக அவசர அவசரமாக ஓடும்போது காலுக்கு அளவில்லாத அந்தச் சப்பாத்து ஒன்று கால்வாயில் விழுந்து விடுகிறது. கால்வாயில் ஓடும் கழிவு நீரில் ஓடும் சப்பாத்துக்குப் பின்னால் சாராவும் ஓடுவது, அவளுடைய வறுமையையும், பொருளாதார இயலாமையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. வறுமைக்குட்பட்ட மக்களுக்கு வாழ்வில் அத்தனையும் துயரம் என்கின்றபோது அவர்கள் வாழ்வில் மிகச்சிறிய ஒரு பொருளைத் தொலைத்தாலும் அதனைப் பெறுவதற்கு எப்படியெல்லாம் போராடுகின்றனர்.



அதனை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு எத்தனை நாள்கள் எடுக்கின்றன. இதனால் எவ்வளவு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை கனகச்சிதமாக வெளிப்படுத்தியுள்ளார் இயக்குநர்.



## சிலுவை வெற்றியின் சின்னம்

'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.'

ஒவ்வொரு மனிதனும் பல்வேறு தேடல்களுடன் வாழ்வை நகர்த்துகின்றான். தேடலின் பாதை சிலருக்கு இறையடியாகவும் சிலருக்கு அதிகாரமாகவும் பலருக்கு பட்டம், புகழ், பணம், ஆடம்பரவாழ்வு, மண், பெண், பொன் ஆசையின் பெட்டமாகவும் அமைகின்றது. எதைத் தேடலாம் என்ற தெரிவுச் சுதந்திரம் எம் பக்கமே விடப்பட்டுள்ளது.

கடவுளுக்கு உரியவற்றின் தேடல்கள் முதலில் ஒறுத்தலும் துன்பமும் பரிகாசமாகவும் அற்பமானதாகவும் தென்படும். காரணம் கடவுளின் கட்டளைகள் மதிப்பீடுகளின்படி ஒழுகுவது சாதாரண காரியமல்ல. ஆனால், காலப்போக்கில் நாம் தேடுகின்ற நிறைவை நம் வாழ்வுக்குள் அது கொண்டுவந்துவிடும்.

மாறாக வாழ்வின் நிறைவை இன்ப வேட்கைகளிலும் தவறான வழிகளிலும் தேடும்போது இன்பம் பயப்பது போன்று தோன்றினாலும் இறுதியில் தீராத துன்பத்துக்குள் தள்ளிவிடுகிறது. வாழ்வும், சாவும், நன்மையும், தீமையும் எமக்கு முன்னால். அவற்றில் எதைத் தேர்ந்தெடுக்கின்றோம்?

நாமும் வாழ்ந்து பிறரும் நலம்பெற வேண்டுமெனில் சுயத்தை இழந்துதான் ஆகவேண்டும். அன்பை வாழவைக்கும்படி இறங்கி பணியாற்றத்தான்வேண்டும். விரோதியையும் மன்னித்துத்தான் ஆகவேண்டும். சிறுமைகளைத் தாங்கி சிலுவைகளைச் சுமந்து செல்லத்தான் வேண்டும். அப்போது முடிவிடம் நிச்சயம் இனிமையும் வெற்றியுமாக அமையும்.

**எஸ்.யேசுதாஸ்,**
**கொழும்புத்துறை**

# வரலாற்றில் பெண்கள்

ஜீ.ஜீவனா



பெண் என்றால் யார்? இந்தக் கேள்வி இந்த நூற்றாண்டிலும் இருந்து கொண்டேதான் இருக்கின்றது. இந்தக் கேள்விக்கான அவசியமும், அந்தக் கேள்விக்கான பதில்களும் இன்னமும் தேடப்பட வேண்டியவையாகத்தான் இருக்கின்றன. ஆண்கள் உழைக்கப் பிறந்தவர்கள். பெண்கள் அவர்களுக்குச் சமைத்துக் கொடுத்து குடும்பப் பொறுப்பைச் சுமக்கப் பிறந்தவள் என்ற மனோபாவம் கொண்ட ஆணாதிக்க சமுதாயம் இன்றும் காணப்படுகிறது. ஆனால் பெண் என்பவள் வெறுமனே குடும்பப் பாரத்தைச் சுமப்பவள் அல்ல. அதையும் தாண்டி விண்வெளியிலும் நடப்போம், சாதிப்போம் என்று பெண்கள் நிறைய சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

அன்று பாரதியார் பெண்களின் நிலைகண்டு மனம் வருந்தி வெகுண்டெழுந்து பெண்விடுதலைபற்றிப் பாடினார். பெண்கள் கல்விகற்க வேண்டும் புதிய உலகை படைக்க வேண்டும் - என்றார். இன்று வரலாற்றில் பெண்கள் வெற்றிநடை போடுகிறார்கள். ஆண்கள் செய்யும் வேலைகளை பெண்களாலும் செய்ய முடியும். முற்காலங்களில் பெண் அடிமைத்தனம் மேலோங்கி பெண்களை குழந்தை பெறும் இயந்திரங்களாகவும் வீட்டுவேலை செய்யும் அடிமைகளாகவும் பாவித்தார்கள். ஆனால், அன்று ஔவையார் தொடக்கம் இன்று 16 வயது சிறுமி கிரைட்டா தன் பேர்க் வரை வரலாற்றில் பெண்கள் சாதித்தது ஏராளம். பெண்களின் ஆற்றல்களும் முக்கியத்துவமும் வெளியே தெரிய வரத்தான் உலக நாடுகள் எல்லாம் விழித்துக்கொண்டு சர்வதேச மகளிர் தினம், பெண்கள் தினம் அன்னையர் தினம் என்பவற்றைக் கொண்டாடுகின்றன.



அரசியலில்கூட பெண்கள் பிரவேசித்து பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். உதாரணமாக இலங்கையில்கூட பண்டாரநாயக்க உலகில் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றார். அவரின் காலத்தில்தான் முதன் முதலாக இலங்கையருக்கான யாப்பு உருவாக்கம் பெற்றது. இன்றைய காலத்தில் பெண்கள் அரசியலில் பங்குபற்றவேண்டும் என்று கருத்து ஆழமாகப் பரப்பப்பட்டு வருகிறது. சில நாடுகள் அதையும்தாண்டி நாடாளுமன்றத்தில் பாதிப் பிரதிநிதித்துவத்தை பெண்களுக்கு வழங்கிவிட்டன. அதற்கு சிறந்த உதாரணமாக ருவாண்டாவைக் கூறலாம். அங்கு நாடாளுமன்றத்தில் மொத்தம் 80 பேர் அதில் 45 பேர் பெண்கள். பின்லாந்தில் 34 வயதில் இளம் பிரதமராக சன்னா மரீன் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரும் சாதனைகள் பல புரிந்து பெயரைத் தக்கவைப்பார் எனக் கூறுவதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால் பெண்களால் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்யமுடியும். ஒரு வீட்டின் சிறந்த நிர்வாகி யார் என்றால் அது அம்மாவாக மட்டும் தான் இருக்கமுடியும். ஒரு வீட்டை எந்த நேரமும் கண்காணிப்பாளராக சிறப்பாக நிர்வகிக்கத் தெரிந்த பெண்களால் நாட்டையும் நிர்வகிக்க முடியும். பல கட்டுப்பாடுகளைக் கொண்ட சவுதி அரேபியாகூட தற்பொழுது, பெண்கள் வாகனம் ஓட்டமுடியும், ஆண் துணை இல்லாமல் தனியாக பயணம்செய்யமுடியும், கால்பந்துப் போட்டிகளில் பங்குகொள்ளமுடியும் எனக் கட்டுப்பாடுகளை தளர்த்தியிருக்கின்றது. வரலாற்றில் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா, ஆங் சான் சுகி என பல பெண்களை சாதனைப் பெண்களாக அடுக்கிக்கொண்டே போகலாம். இன்று கிரைட்டா தன் பேர்க் என்ற சிறுமி காலநிலை மாற்றம் பற்றிப் போராட்டம் நடத்தாவிட்டால் உலக நாட்டுத் தலைவர்களோ நாங்களோ காலநிலை மாற்றம் பற்றிச் சிந்திப்போமா? விழித்துக் கொள்வோமா?





**'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவதில்லையாம்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நடேசு தயாளன்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

# 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விச் செயன்முறைகள்



**“21ஆம் நூற்றாண்டானது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பொருளாதார நிலைசார்ந்ததாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு கைத்தொழில் யுகத்தில் இருந்து அறிவு யுகத்துக்கான மாற்றம் நிகழ்ந்துள்ளமை நோக்குதற்குரியது. இந்தநிலையில் எதிர்கால உலகில் வாழ்வதற்கும் தொழில் உலகின் சவால்களை வெற்றி கொள்வதற்கும், கல்வியை வழங்குவோரும், கல்வியை வழங்கும் நிறுவனங்களும் கல்விச் செயன்முறைகளினூடாக பின்வரும் திறன்களைக் கற்போனிடம் வளர்த்தல் அவசியமாகும்.**

**விமர்சன ரீதியான சிந்தனை, ஆக்க மலர்ச்சிச் சிந்தனை, கூட்டிணைவான செயற்பாடு, சிறந்த தொடர்பாடல் திறன், தகவல் தொழில்நுட்ப அறிவு, ஊடகத் திறன், நெகிழ்வுத் தன்மை, சிறந்த தலைமைத்துவத் திறன், உற்பத்தித் திறன், சமூகத்திறன், இத்தகைய திறன்களைப் பாடசாலையில் மாணவர்களிடம் வளர்க்கப்படுமிடத்து பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்யும் மாணவர்கள் தொழில் உலகின் போட்டிகளைச் சிறப்பான முறையில் வெற்றிகொள்ள முடியும் என்பதோடு நற்பிரஜையாகவும் வாழமுடியும்.**

**எழுத்து, வாசிப்பு, மற்றும் கணிக்கும் திறன்களைப் பாடங்களுடாக வழங்குதல், கற்கும் திறன் எழுதும் திறன் வாழ்க்கைத் திறன் என்பவற்றினை வழங்குதல், சமூக மனவெழுச்சிக் கற்றலை வழங்குதல், குடிமகனின் உரிமைகள் கடமைப் பொறுப்புக்கள்பற்றி அறியச் செய்தல், கலாசார பல்வகைமைகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் பொதுப்பெறுமானங்களை மதிக்கும் திறன் என்பவற்றினையும் உள்ளடக்கியதாக 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி அமைதல் வேண்டும் என கருதப்படுகின்றது.**

### எத்தகைய கல்வி இப்போது தேவை

கல்வியானது நிலையான அபிவிருத்திக்கும் நிலையான சமாதானத்துக்கும் பங்காற்ற வேண்டும் என்பதோடு பிராந்திய அபிவிருத்திக்குப் பங்காற்றுவதோடு பிராந்திய ஏற்றத்தாழ்வுகளையும் குறைப்பதாக இருக்க வேண்டும்.

21ஆம் நூற்றாண்டுக்கான கலைத்திட்டமானது வெளியீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகவும் ஆய்வுச் செயன் முறையினை உள்ளடக்கியதாகவும், கற்போன் மையமானதாகவும், செயற்பாட்டு நிலையினதாகவும், உயர்மட்ட எண்ணங்கள் கொண்டதாகவும் வாழ்க்கை நீடித்த திறன்களை விருத்தி செய்வதாகவும் அழுத்தங்களற்ற ஆரோக்கியமான சூழலை வழங்கக் கூடியதாகவும் மகிழ்ச்சிகரமான கற்றலையும் வழங்குவதாகவும் மாற்றியமைக்கப்படுகின்றது. 21ஆம் நூற்றாண்டுக் கற்றலானது சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலாக இ:டம்பெறுவது அவசியமானதாகும்.

இங்கு கற்போன் சுயமாகத் தெரிவுசெய்து கொண்ட செயற்பாடுகளூடாக தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை, தெரிவு செய்யப்பட்ட அமுலாக்கல் முறைகளுடாக அடைவதற்கான கற்றலை மேற்கொண்டு அனுபவங்களைத் திரட்டுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவது அவசிமானதாகும்.

சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலானது கற்றல் தந்திரோபாயத்தினையும் செயன்முறைகளையும் தீர்மானித்துக் கற்பதற்கு வாய்ப்பளித்தலாகும்.

### சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலின் அவசியம்

சுய நெறிப்படுத்தப்பட்ட கற்றலில் ஈடுபடுபவன் சுய வலுவூட்டலுக்கு உட்படுபவனாகவும் அதனூடாக சுய கற்றலில் ஈடுபடவும் முடிகின்றது என்பதோடு பிரச்சினை தீர்க்கும் கற்றல் திறனினையும் பெற்றுக்கொள்ள முடியும். சுய நெறிப்படுத்தப்பட்ட கற்றலை மாணவனிடம் ஊக்குவிக்கும்போது கற்றலின் இலக்கினை இனங்காணும் திறன் விடயங்களை ஏன்? எதற்கு? என வினா எழுப்புவதனூடாக தீர்வினை பெறும் திறன், சவால்களை இனங்காணும் திறன், என்பவற்றினை கற்போனிடம் வளர்க்க வேண்டும். மேலும் கற்க வேண்டிய திறன்களைத் தொகுதியாக்கும் ஆற்றல் தனது கற்றலானது தனது இயலுமைக்குட்பட்டது என்பதனை இனங்கானும் திறன் குறித்த விடயங்களை கற்கும் ஏனைய சகபாடியுடன் சேர்ந்து செயற்படும் திறன் என்பவற்றினையும் பெற்றவனாக கற்போன் வளர்க்கப்பட வேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்கான பாடசாலையின் வகுப்பறையானது விரிவுரைக்குப் பதிலாக கலந்துரையாடல் சார்ந்ததாக அமைந்து காணப்படும். ஆசிரியர் வளவாளராகச் செயற்படுவார். கற்றல் செயற்பாட்டில் கற்போர் சிறுகுழுக்களாகச் செயற்படுவர். இங்கு கூட்டிணைவான கற்றல் செயற்பாடுகள் இடம்பெறும். மாணவர் மையமான கற்றல் இடம்பெறுவதோடு சுதந்திரமான கற்றலும் இடம்பெறும். இது நவீன தொழில்நுட்பசாதனங்கள் நிறைந்த வகுப்பறையாகவும் காணப்படும். 21ஆம் நூற்றாண்டுக்




கற்போனானவன் சுயநெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கை நீடித்த கற்போனாகவும் தூரநோக்குடைய கற்போனாகவும் கூட்டிணைவான தொடர்பாளராகவும் தகவல் தொடர்பான முகாமைத்திறன் உடையவராகவும் ஆரோக்கியமான மனிதராகவும் உலகக் குடிமகனாக விளங்குவதற்கான திறனினைப் பெற்றவராகவும் நெகிழ்வுப் போக்கான சிந்தனையாளராகவும் விளங்குவார். 21ஆம் நூற்றாண்டுக்கான பாடசாலை அதிபரது வகிபாகமானது ஏனையவர்களை வலுவூட்டுவதாகவும் தீர்மானங்களை விருப்புடன் எடுக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும் ஏனெனில் பாடசாலையானது சிக்கலான செயன்முறைக்கு உட்பட்ட இடமாகும். அந்த நிறுவனத்தின் இயங்கு நிலையில் எவ்வாறு அந்த நிறுவனத் தலைவரானவர் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றார் என்பதனைப் பொறுத்தே பாடாசாலையின் செயற்திறனினை நோக்க முடியும். பாடசாலைத் தலைவரானவர் தான் சார்ந்த சமூகத்திடம் நம்பிக்கையினையும் உறுதியினையும் கட்டியெழுப்புவதன் மூலம் பாடசாலையினைப் புதிய கலாசாரச் செயன்முறைக்கு இட்டுச் செல்வதனூடாக நோக்கக் கூற்றினையும் பணிக்கூற்றினையும் உருவாக்க முடியும்.

இவை இரண்டும் பாடசாலைத் தலைவரினை சரியான திசையின்பால் வழிநடத்தப் பங்காற்றுவதாக இருக்கும் பாடசாலையின் உரித்தாளர்களிடம் சிறந்த வாண்மைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் மனாமுச்சிசார் நுண்மதித் திறன் சுயவிழிப்புனர்வு சுயமுகாமைத்துவம் சமூகவிழிப்புணர்வு தொடர்பாடற் கோலம் என்பன இன்றியமையாத திறன்களாகவுள்ளன. சிறப்பான தொடர்பாடற் கோலத்தினை; கட்டியெழுப்புவதன் மூலம் பிரச்சினைகளை இனங்காண முடியும் என்பதோடு அவற்றுக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால் பாடசாலையின் வளர்ச்சி சார்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். பாடசாலைத் தலைவரானவர் முறைசார்ந்த முறைசாரா வகையில் செயற்படுவதனூடாக நம்பகரமானதாகவும் அர்ப்பணிப்பு மிக்கதுமான வாண்மைத்துவ அணியினை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இதன் மூலம் தரமான கல்வியினை மாணவர்களுக்கு வழங்குவதனூடாக அவர்களின் கற்றல் மட்டத்தினையும் உயர்வடையச் செய்ய முடியும்.

21ஆம் நூற்றாண்டு அதிபரானவர் கல்வித் தலைமைத்துவத்தினை வழங்கக் கூடிய அறிவுறுத்தல் திட்டங்களை வகுக்கக் கூடியவராக அணியுருவாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவராக உணர்திறன் உடையவராக விளங்குதல் வேண்டும். மேலும் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுடையவராக விளங்க வேண்டும்.

இதற்காகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு ஒழுங்கமைக்கும் திறன் என்பவற்றினையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆத்துடன் அதிபரானவர் சிறந்த தொடர்பாடற் திறனுடைவராகவும் விளங்குதல் வேண்டும். இங்கு வாய் மொழி மூலமான தொடர்பாடற் திறன் மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடற் திறனும் அவசியமானதாகும்.

பாடசாலைத் தலைவரானவர் செயற்பாடுகளில் ஈடுபடுபவராகவும் பாடசாலைசார் சமூகத்தினரால் அணுகக் கூடியவராக நேர் மனப்பாங்குடையவராக பாடசாலையின் நோக்கக் கூற்றினை வடிவமைக்கக் கூடியவராக சிறந்த தொடர்பாடற் கோலத்தினையுடையவராக தொடர்ந்து கற்பவராக காலந்தாழ்த்தாது வெளிப்படைத் தன்மையுடன் தீரமானம் எடுத்துச் செயற்படுபவராகவும் விளங்குதல் வேண்டும்.

கல்வியை வழங்கும் செயன்முறையில் பங்கு கொள்ளும் கல்வித் திட்டமிடலாளர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்களும் 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வியை வழங்குவதில் புதிய செல்நெறிகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும் இதன் மூலமே எதிர்காலத்துக்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலயச் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில், சிறப்புச்சொற்பொழிவை 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அதனைத்தொடர்ந்து சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரி சில்களும் வழங்கப்படவுள்ளன. (எ-14)

# பரிசுக்குப் பதிலாக உலருணவுப் பொதி!

சாவகச்சேரி, மார்ச் 8

சாவகச்சேரி நகர்மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வு இன்று புதன்கிழமை சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்தி நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மாதர் கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி சுவேந்ரா சுதாகர் கலந்துகொள்ளவுள்ளார். வழமையாக பரிசில்கள் வழங்கப்படும் நிலையில், இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## மரண அறிவித்தல்



### திருமதி பவானியம்மா தெய்வேந்திரம்
### (அம்பியா)

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவானியம்மா தெய்வேந்திரம் நேற்று முன்தினம் (06.03.2023) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு ஏகபுத்திரியும், ஓட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் தங்கச்சியம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசக்திவேல்(குமரேசு), பாலகிருஸ்ணப் பிள்ளை(செல்வரத்தினம்), கயிலைநாதன்(ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற உலகேஸ்வரி, காலஞ்சென்ற சறோஜினிதேவி, குலராணி, காலஞ்சென்ற நித்தியலச்சுமி ஆகியோரின் மைத்துனியும், இலட்சுமணரின் உடன்பிறவா சகோதரியும், கலாநிதி, சிறிதரன், மஞ்சுளாநிதி, கிரிதரன், காலஞ்சென்ற பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகன்குமார், மஞ்சுளா, அருளானந்தம், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜலஷ்சன், கௌசிகன், பகீர்த்தனா, விபூசன், திபூஷா, தர்மினி, அதீஷன், மிதுஷன், சினேகா, சஜன், தன்வி, யசிக்கா, யதுசிக்கா, டினேஷ் ஆகியோரின் பேர்த்தியும், அஷ்வினின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரன்
பாலகிருஸ்ணப்பிள்ளை
(செல்வரத்தினம்)

இல.402, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

021 222 1659
077 481 9738

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 • 05 • 1943



மறைவு 07 • 03 • 2023

### கணேசன் இராஜபூபதி

பெரியரசடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் இராஜபூபதி நேற்று (07.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி (இராசமணி) - அன்னம்மா தம்பதிகளின் மூத்த புத்திரியும், காலஞ்சென்ற கனகசபை கணேசன், அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகசபை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், துரைரத்தினம் (லண்டன்), காலஞ்சென்ற இலட்சுமிப் பிள்ளை, விமலாதேவி, யோகீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜரஞ்சிதம் (ஆசிரியை - யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), இராஜஜீவி (ஆசிரியை - யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (சாவகச்சேரி பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகாமிப்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற நடராஜா மற்றும் கணேசலிங்கம் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், சண்முகலிங்கம் மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், குகரதன் (தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொரட்டுவப் பல்கலைக்கழகம், NDT), பிரியந்தி (சித்த மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), தனுஷிகா (பிரயோக விஞ்ஞானம் - வவுனியா பல்கலைக்கழகம்), பிறின்ஷிகா, குகபரன் (பொறியியல் பீடம் - மொரட்டுவைப் பல்கலைக்கழகம் ), குகபவன் (A/L - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கௌசல்யா (லண்டன்), கௌந்தரிகா (லண்டன்), கௌதினியா (லண்டன்), நற்குணவதனி, சிவதர்சினி, பூங்கோதை (ஜேர்மன்), தேவிகா (ஆசிரியை - யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), காண்டீபன், தர்மினி, கபிதீபன், வனஜா, சுகுணன் (கனடா), கௌரி, சசி, கிருத்திகா (ஆசிரியை - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2023) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய அரசடி, அரசடி,
சாவகச்சேரி.

(CS/49304)4,6

தகவல்:-
குடும்பத்தினர்.

**077 127 5224, 077 699 8105**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 • 12 • 1934



மறைவு 07 • 03 • 2023

### உயர்திரு.வல்லிபுரம் சுப்ரமணியம் குமாரசாமி
### (கட்டட பரிசோதகர் கல்வி அலுவலகம்)

நெடுந்தீவு மேற்கினைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சுப்ரமணியம் குமாரசாமி நேற்று (07.03.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் நாகம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் அன்னலட்சுமியின் மருமகனும், அமரர் புஸ்பராணியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (நியூசிலண்ட்), கிருபாகரன் (ஜேர்மனி), உமாதேவி (கனடா), ஜெய தேவி (நியூசிலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜானகி, சுதா (ஜேர்மன்), ராஜ்குமார் (கனடா), ரூபன் (நியூசிலண்ட்) ஆகியோரின் மாமனும், அமரர்களான திரு.கனகரட்ணம் (முன்னாள் AGA ), பராசக்தி, பாலசிங்கம் (மலேரியா தடுப்பு அதிகாரி), பாக்கியலட்சுமி மற்றும் திரு. V.S.குலசிங்கம் (முன்னாள் இலங்கை வங்கி அதிகாரி), மல்லிகாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதி (கனடா), காலஞ்சென்றவர்களான நடராசா, தவமணி, கனகசபை (D.O) மற்றும் செல்வராணி, கருணாநிதி (ஜேர்மனி), கதிரமலை (இளைப்பாறிய மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்), இந்திரா, லில்லி ஆகியோரின் மைத்துனரும், தினேஷ், நிரேஷ், உமேஷ், ஆயிதன், அஞ்சனா, அனிஷா, லவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனோன்மணி அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

071 794 3362
077 615 3725

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுப் பாலினக் கருத்தியல் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8

பொருளாதாரப் பண்பாட்டு ஆதிக்கம், பெண் ஒடுக்குமுறை, மாற்றுப் பாலினக் கருத்தியல் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் சவால் ஆகிய தொனிப்பொருளில் விசேட கருத்தரங்கொன்று கொக்குவில் கலை இலக்கியப் பேரவையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வேறுபட்ட பாலினத்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, சமூகத்தில் அவர்களுக்கு உள்ள சவால்கள் என்பன கலந்துரையாடப்பட்டன.

பாலின சமூகத்தவர்கள் வேறு கண்களூடாக பார்க்கப்படுகின்றனர். அவர்கள் பாலியல் ரீதி யாகவும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஏனையவர்கள் போல் தங்களையும் இந்த சமூகம் மதிக்க வேண்டும் என்றும், கண்ணாடி வைத்துக் பார்க்க வேண்டிய அவசியமில்லை எனவும் பாலினத்தவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர். சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் வளவாளராக ஊடகவியலாளர் துளசி முத்துலிங்கம் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்தார்.

(எ-14,23)

# மெய்வன்மைப் போட்டி

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை முதல்வர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தின ராக பாடசாலையின் பழைய மாணவரும் சாரா இண்டஸ்றீஸின் முன்னாள் கணக்காளருமான பரராஜசிங்கம் சாந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

## ரீ மேக்கர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்துக்கு ரீமேக்கர் தேவை.

**076 560 5590**

## University College of Jaffna

University of Vocational Technology
Ministry Of Education

### Intake 2022

NVQ Level 5 & 6 /National Diploma & Higher National Diploma

Closing Date of applications has been extended up to 17th March 2023

*For more details:* Assistant Registrar,
University College of Jaffna,
No.29, Brown Road, Kokuvil, Jaffna.

www.ucj.ac.lk 021-221-7791

## கேள்வி அறிவித்தல்

## ORHAN

- ஓஹான் நிறுவனம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகளை கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக கோருகின்றோம்.
- தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகிறது.
- கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்பு பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆர்வமுள்ள கேள்விதாரர் ஓஹான் நிறுவனம், 2ம் ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி, தவசிக்குளம், வவுனியா அலுவலகத்தில் இருந்து 0242051204 / 0777343531 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ஆர்வமுள்ள கேள்விதாரர் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணம் ஒன்றையும் அதற்கான வரைபடத்தையும் மேற்படி அலுவலகத்தில் 08.03.2023 இல் இருந்து 13.03.2023 வரை, காலை 09.00 மணி முதல் பி.ப 4.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் ரூபா 2000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.(இது மீளளிக்கப்படாத தொகையாகும்)
- பூரணமாக நிரப்பப்பட்ட கேள்விகள் ஓஹான் நிறுவனம், 2ம் ஒழுங்கை பாலவிநாயகர் வீதி, தவசிக்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 15.03.2023ம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். ஓஹான் நிறுவன தெரிவுக் குழுத் தீர்மானமே இறுதியானதாக அமையும் (ஏதேனும் காரணங்களால் நடாத்துதல், இடைநிறுத்தம், நிராகரித்தல், தெரிவு செய்தல்)

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | வேலை இடம் | ஒப்பந்த காலம் | துறை | வேண்டப் படும் தரம் |
|---|---|---|---|---|---|
| DevPro/ORHAN/RIES/2023/01,02,03,04 | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடைய தொழில் நிலையங்களுக்கு 2 அணுகு வசதிகளுடன் கூடிய நிரந்தர மலசலகூடம் அமைத்தல் மற்றும் 2 தொழில் நிலையங்களுக்கு அடிப்படை அணுகு வசதிகளினை (Ramp, Hand rills) மேம்படுத்துதல். | • RL இன்டஸ்ரீஸ் - முள்ளியவளை<br>• மயூரன் இன்டஸ்ரீஸ் நெடுங்கேணி.<br>• சதுஸ்டார் மற்றும் குயின் புரடக்ஸ் - புதுக்குடியிருப்பு. | 08 வாரங்கள் | கட்டிடம் | C8 அல்லது C7 |

தலைவர்
ஓஹான் நிறுவனம்,
2ம் ஒழுங்கை பாலவிநாயகர் வீதி,
தவசிக்குளம், வவுனியா.

(CR 39405)(3/6)

# EDLOCATE'S

# STUDY ABROAD DAY

Edlocate மூலம் வெளிநாட்டு கல்வி வாய்ப்புகள்

**18** MARCH 2023 | 09.00AM 12.00PM

C/O IIS City Campus, No 200, Sivan Pannai Road, Jaffna,



SCHOLARSHIPS available for HIGH ACHIEVERS*

ENTRANCE FREE

*T&C APPLY

23 Years of excellence

We will handle Visa

Australia New Zealand Canada England Ireland Malaysia Vietnam

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

For information & to register:
077 2223178
011 4845772

Follow Us On

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள் வீழ்ந்து மூதாட்டி உயிரிழப்பு!

சாவகச்சேரி, மார்ச் 8

கிணற்றுக்குள் தவறி வீழ்ந்ததில் மூதாட்டியொருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கச்சாய் தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குளிக்கச் சென்ற வேளையில் தவறி வீழ்ந்ததால் அந்த மூதாட்டி உயிரிழந்திருக்கலாம். சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டிக்கு 68 வயது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன.

(அ-ம-9)

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 01 . 1939

மறைவு 07 . 03 . 2023

## இராஜரத்தினம்பிள்ளை பாலஸ்கந்தவேல்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்- பெருந்தெருக்கள் திணைக்களம், மன்னார் எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா)**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரத்தினம்பிள்ளை பாலஸ்கந்தவேல் நேற்று (07.03. 2023) செவ்வாய்க்கிழமை அம்பாள் தாழடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான இராஜரத்தினம் பிள்ளை செல்லம்மாள் தம்பதிகளின் புதல்வரும், அமரர் தெய்வநாயகி அம்மாளின் அன்புக் கணவரும், பாலலோஜினி, சரவணபவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மாசினி, அமரர் விசாகேசன், கார்த்திகேயன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், பாலபத்மன், மயூரதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2023) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பங்களா லேன், மல்லாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 02 . 1959

மறைவு 02 . 03 . 2023

## சுப்பிரமணியம் கணேசலிங்கம்

**(அகில இலங்கை சமாதான நீதவான் J.P, ஓய்வு நிலை தபால் அதிபர், முன்னாள் தலைவர் - நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்)**

யாழ். நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும், வவுனியா பெரியதம்பனையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசலிங்கம் J.P அவர்கள் கடந்த (02.03.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயாம்பிகையின் பாசமிகு கணவரும், அகிலன் (கனடா), தயாளன், மாறன் (கனடா), சாம்பவி (அமெரிக்கா), அனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா (கனடா), ஜெமிலா, கீர்த்தனா (கனடா), வரதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சபாநாயகி, தியாகலிங்கம் (நோர்வே), புண்ணியலிங்கம், கலாநாயகி, குலநாயகி, செந்தில்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமிர்தாம்பிகை, மோகனதாஸ் (கனடா), காலஞ்சென்ற கோசலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காவியா, அக்ஷயா, சாகித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல. 43, பெரியதம்பனை, வவுனியாவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணிக்கு பெரியதம்பனை கற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புண்ணியலிங்கம் (சகோதரர்)-077 640 8918,
மாறன் ( மகன்) - 0778893273,
தயாளன் ( மகன்) - 0772055558,
அனுஜன் (மகன்) - 0768886204.

**தகவல் : குடும்பத்தினர்.**

(CS 1087) 1-6

# 08ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுச் சடங்கு அழைப்பும்

## திருமதி யூலியற் ஜெயசீலி பெனடிக்ற்

**(லைடன் ரெக்ற்ரைல்ஸ் உரிமையாளரின் மனைவி)**



அன்னாரின் 8ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுச் செலவும் நாளை 09-03-2023 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், சுண்டுக்குளி, புனித யுவானியார் ஆலயத்தில் காலை நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். பின்னர் அன்னாரின் இல்லத்தில் நினைவு வழிபாடும் மதியபோசனமும் இடம்பெறும். இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு

அன்னாரின் நித்திய இளைப்பாற்றிக்காக நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**குடும்பத்தினர்.**
**021 222 6310**

**தோற்றம் 16.03.1945**

**மறைவு 02.03.2023**

**வீட்டு முகவரி:-**
**27, சுவாட்ஸ் லேன்,**
**சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.**

(CS 23619) 1-6

# மரண அறிவித்தல்



## நவமணி ஆசீர்வாதம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி ஆசீர்வாதம் அவர்கள் நேற்று (07.03.2023) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி (தலைமை ஆசிரியர்), நவரத்தினம், திரவியம், நாகரத்தினம் மற்றும் செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், திருமதி செல்வராணி சத்தியசீலன் (உப அதிபர் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை), ஆசீர்வாதம் ரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (08.03.2023) பி.ப 2.30 மணியளவில் ஆலடி சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு: 077 627 9298**
**டச்சு வீதி, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**மகள் - சத்தியசீலன் செல்வராணி**
**மகன் - ஆசீர்வாதம் ரஞ்சன்.**

(CS 1092) 1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 04 . 1951



இறப்பு 07 . 03 . 2023

## இராமபிள்ளை சண்முகநாதன்

கச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமபிள்ளை சண்முகநாதன் நேற்று (07.03.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமபிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், கோபிகிருஷ்ணாவின் அன்புத் தந்தையும், இனிதாவின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திரபாலன் (பிரான்ஸ்), இரத்தினதேவி, தங்கராணி (பிரான்ஸ்), யோகமலர், செல்வமலர், பாமா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், வைசாலியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**67, பாரதி வீதி, கச்சேரியடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 529 3064**

(CS 1088) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்னலுக்காக மன்னியுங்கள்!

## ஜனாதிபதி ரணில் பகிரங்கம்



கொழும்பு, மார்ச் 8
பொருளாதார நெருக்கடி நிலையால் மக்கள் படும் இன்னல்களை நான் அறிவேன். அதற்காக அரசாங்கம் என்ற வகையில் மன்னிப்புக் கோருகிறோம் என்று நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தை பலப்படுத்த பல கடினமான பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தோம். பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொண்டு வருகிறோம். இதனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தொடர்ச்சியாக இன்னல்கள் ஏற்படும். நாட்டை முன்னேற்ற பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை. இதை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் குழுக்கள், அரசியல் கட்சிகள், தொண்டர் குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்றவை இது குறித்து ஆழமாகச் சிந்திக்கவேண்டும். வரிச்சுமை அதிகமாக உள்ளதாக தொழில் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைமை ஒரு குறுகிய காலத்துக்குப் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்தத் திட்டம் சீர்குலைந்தால், 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இருந்த நிலையைவிட மிகவும் ஆபத்தான இடத்திற்கு நாடு தள்ளப்படலாம். சமூகத்தில் செல்வாக்கு மிக்க குழுக்கள் நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நாசமாக்கினால், அதிலிருந்து உருவாகும் சமூக மாற்றம், மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இது நம் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாத சோகமான காலத்துக்கு வழிவகுக்கும்.

கருத்துக்களை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாக செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயற்படும் என்று கூற விரும்புகிறேன் - என்றார். (அ-ம-22)

# இளவாலை வாள்வெட்டு; நால்வர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 8
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோவில் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி ஒருவர் மீது வாளால் வெட்டி காயப்படுத்தி அவரது காரையும் சேதப்படுத்தி தப்பிச் சென்ற நால்வர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் கனடா நாட்டிலிருந்து இரண்டு லட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டு இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

பனிப்புலம் மற்றும் சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் எனவும் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து வாள் மற்றும் மோட்டார்சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-26)

# வெடிக்காத நிலையில் அச்செழுவில் எறிகணை

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணம் அச்செழுப் பகுதியில் வெடிக்காத நிலையில் நேற்று எறிகணையொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அச்செழு பொலிஸார் தெரிவித்தனர்.

தனது காணியில் எறிகணை உள்ளது என்று காணியின் உரிமையாளர் தெரிவித்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இந்த எறிகணை மீட்கப்பட்டது. மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய எறிகணையை செயலிழக்க வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-23)

## நிதியுதவி

யாழ்ப்பாணம் மார்ச்8
மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையினர் ஊடாக கனடா சித்தங்கேணி ஒன்றியத்தினரால் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு 6 லட்சம் ரூபா நிதியுதவி அண்மையில் வழங்கப்பட்டது. (ய)


## வாழ்த்தரங்கு

இலங்கை சாகித்திய மண்டலம், வடக்கு மாகாணசபை, தமிழக பண்பாட்டு அமைப்புக்கள் போன்றவற்றில் கவிதை, சிறுநாவல், பனுவல்கள் படைத்து கலை இலக்கிய உலகால் பாராட்டப்பட்டுவரும் ஈழத்து படைப்பாளுமை மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரேமினி (தட்சாயணி) பொன்னம்பலத்துக்கு வாழ்த்தரங்கு கே.எஸ் சந்தியமனை நூலகத்தின் ஏற்பாட்டில் தொல்புரத்தில் அமைந்துள்ள கே.எஸ் சந்தியமனை நூலகத்தில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தையா சிறிகணேசன், நூலக நிர்வாகி கே.எஸ் இரவீந்திரன், வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஜெயந்தன் ஆகியோர் கலந்துகொண்டு வழங்கினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆற்றுகை செய்யப்பட்டன. (ய-125)



காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சரத் திருக்கோயிலில் மாசி மக திருவிழா ஆலயப் பிரதம குரு கருணானந்தகுருக்கள் தலைமையில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்றது. (ய-213)



ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் முதல் வாரத்தில்

# தேர்தல் திகதியை அறிவிக்க சாட்டுக்கள் சொன்ன தவிசாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

21 நாள் அவகாசத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தயாராக இருப்பதாகக் கூறியபோதும், பல்வேறு சாக்குப்போக்குகளைச் சொல்லி தட்டிக்கழித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், உறுப்பினர்கள், தேர்தல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருடன் எதிரணிகளின் கட்சித் தலைவர்கள் நேற்றுக்காலை சந்திப்பு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட எதிரணிகளின் கட்சித் தலைவர்கள் உடனடியாக உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். இதன்போது, 21 நாள்கள் கால அவகாசத்தில் தம்மால் தேர்தலை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர். ஆனால், அவ்வாறு செய்ய முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் தெரிவித்துள்ளார். ஏப்ரல் முதல் வாரத்தில் கிறிஸ்தவப் பெருநாள் வருகின்றது. முஸ்லிம்களின் பெருநாள் வருகின்றது. அந்தக் காலப் பகுதியில் நடத்துவது பொருத்தமில்லை என்று இழுத்தடிப்புக்கான காரணங்களை அவர் அடுக்கியுள்ளார். அவரது கருத்துக்கு குறுக்கீடு செய்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், கடந்த காலங்களிலும் எமது பெருநாள் காலப் பகுதியில் தேர்தல் நடந்துள்ளது. எனவே அது எமக்கு ஒரு தடையல்ல என்று கூறியுள்ளார். ஆனாலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் இழுத்தடிப்பு போக்கையே வெளிப்படுத்தியுள்ளார். இதையடுத்து, தேர்தல் நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கப்படுமாக இருந்தால் நீதிமன்ற அவமதிப்பை எதிர்கொள்ளநேரிடும் என்று எதிரணித்தலைவர்கள் கடும் எச்சரிக்கை விடுத்தனர். (அ-ஒ,5)

அலைபேசிமூலமாக

# பணமோசடியில் ஈடுபட்டவர் யாழ். பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 8

அலைபேசியில் அழைத்து, மக்களை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணமோசடி செய்துவந்த நபரொருவர் யாழ்ப்பாண விசேட குற்றவிசாரணைப் பிரிவால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். பண்டாரகம - அட்டுளுகம, பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு அதிர்ஷ்டசீட்டிழுப்பில் கார் ஒன்று கிடைத்துள்ளதாகத் தெரிவித்து 17 லட்சம் ரூபா மோசடி செய்தமை தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தான் ஒரு சாதாரண கூலித் தொழிலாளி என்று தெரிவித்துள்ளார். அவரின் வங்கிக் கணக்கில் 24 லட்சம் ரூபா பணம் உள்ளது. அவரை இன்று (நேற்று) நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதிவரை சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## ஒரே குடும்பத்தைச்...

சிவபாதசுந்தரம் கௌசிகன் (வயது -42), அவரது மனைவியான கௌ. வரதராஜினி (வயது-36), மைத்ரா (வயது -9), கேசரா (வயது - 3) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த வீட்டின் உரிமையாளருக்கு அவருடைய நண்பர் ஒருவர் நேற்று அலைபேசியில் அழைப்பு மேற்கொண்டுள்ளார். வீட்டின் உரிமையாளர் பதில் வழங்காததை அடுத்து அலைபேசியில் அழைத்தவர் வீட்டுக்கு நேரில் சென்றுள்ளார். இதன்போது வீட்டின் உரிமையாளர் சடலமாக தூக்கிலும், அவருடைய மனைவி மற்றும் இரு குழந்தைகள் ஆகியோர் சடலங்களாகப் படுக்கையிலும் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து, வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டுசென்று சடலங்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர். உயிரிழந்த குடும்பத்தலைவர் வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தில் கடமையாற்றிவருவதுடன், அவரது மனைவி மகாறம்பைக்குளம்திருஞானசம்பந்தர்வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

நேற்று இரவு கிடைத்த பிந்திய தகவல்களின்படி, இறந்தவர்களில் மூவரின் உடலில் கழுத்து நெரிக்கப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இன்றையதினம் உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணங்கள் தொடர்பில் தெரியவரலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## ஆட்டிறைச்சியின்...

தால் குடும்பப்பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த லோகந்திரகுமார் மேரி ஜெனிஸ்ரா (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கடந்த 25ஆம் திகதி இந்தப் பெண் ஆட்டிறைச்சி சாப்பிட்டுள்ளார். ஆட்டிறைச்சி எலும்பு தொண்டைக்குள் சிக்கியுள்ளது. அதனால் அவர் வாழைப்பழம் சாப்பிட்டுள்ளார். எலும்பு மார்புப் பகுதிவரை இறங்கி சிக்கிக்கொண்டுள்ளது.

மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். அவரது வாய் ஊடாக கமரா செலுத்தி ஆராய மருத்துவர்கள் முற்பட்டுள்ளனர். எனினும் அதற்கு அனுமதிக்காது குடும்பப் பெண் வீடு திரும்பியுள்ளார். இதையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை குருதி வாந்தி எடுத்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். கமரா மூலம் பார்த்தபொழுது ஆட்டிறைச்சி எலும்பு, குருதிக் குழாயில் குத்தியதாலேயே குருதி வாந்தி ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஏப்ரல்...

திறைசேரியின் செயலரை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அழைத்திருந்த நிலையில் அவர் கலந்துகொள்ளவில்லை. இந்த நிலையில் 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடலில் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தன்னிச்சையாக அறிவித்தது.

உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது. தேர்தலுக்கான நிதி விடுவிப்பில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்தமுடியாது என்று கைவிரித்த தேர்தல்கள் ஆணைக்குழு புதிய தேர்தல் திகதியை மார்ச் 3 ஆம் திகதி அறிவிப்பதாகக் கூறியிருந்தது.

அன்றையதினம் உயர் நீதிமன்றம் ஓர் இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்திருந்தது. தேர்தலுக்காக ஒதுக்கிய நிதியை விடுவிப்பதற்கு முட்டுக்கட்டை போடக்கூடாது என்று திறைசேரியின் செயலருக்கு உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து புதிய தேர்தல் திகதியை திறைசேரியின் செயலர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஆராய்ந்து அறிவிப்பதாக ஆணைக்குழு தெரிவித்திருந்தது. அதற்கு அமைவாக திறைசேரிச் செயலர், பொலிஸ்மா அதிபர், அரச அச்சகத் தலைவர், இலங்கை மின்சாரசபைத் தலைவர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோரை நேற்றுக் கலந்துரையாடலுக்கு ஆணைக்குழு அழைத்திருந்தது.

தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறுவதாகவும் அதில் பங்கேற்கவேண்டியுள்ளதால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்துக்கு வருகை தரமுடியாது என்றும் திறைசேரிச் செயலர் தெரிவித்துள்ளார். அவரைத் தவிர ஏனையோர் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதனையடுத்து நேற்று பி.ப. 1.30 மணிக்கு 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் இணையவழியிலான கூட்டம் நடைபெற்றது. இதன்போது தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும். தபால்மூல வாக்களிப்பு மார்ச் மாதம் 28, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 3ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,5,44)

## இந்தமாத...

சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உறுதி கடிதம் கிடைத்ததையடுத்து, நானும் மத்திய வங்கி ஆளுநரும் கையெழுத்திட்ட இணக்கப்பாட்டுக் கடிதம் சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு நேற்று அறிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

'இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சாதகமான தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட அரசாங்கம் 2022ஆம் ஆண்டு மார்ச் நடுப்பகுதியில் தீர்மானித்தது. நாடு மற்றும் சமூகத்தில் நிலவிய சாதகமற்ற சூழ்நிலையால், 2022 ஆம் ஆண்டு முழுவதும் சுற்றுலாத்துறை வெற்றி பெறவில்லை. ஆனால், இந்த ஆண்டு நிலைமையில் இருந்து எழுந்து நிற்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் சர்வதேச நாணய நிதியத்துடன், அதிகாரிகள்மட்ட உடன்பாட்டை எட்டினோம். நாடு கடன் நிலைத்தன்மையை அடையும் வரை இந்த ஒப்பந்தத்தை சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. எனவே, கடனை நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தியது. இது ஒரு நீண்ட மற்றும் சிக்கலான பேச்சுவார்த்தைகளாகும். இதன்படி, இலங்கைக்கு கடன் வழங்கிய பரிஸ் கழகத்துடனும், பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத இந்தியா மற்றும் சீனாவுடனும் நிதியுதவி உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்வது பற்றி தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்டது. 2023 ஜனவரி 16 ஆம் திகதி அந்த உறுதிமொழியை இந்தியா வழங்கியது. சீனா அதை ஜனவரி 18ஆம் திகதியன்று வழங்கியது.

நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையின் போது, அதன் உடன்பாட்டைப் பெறுவதற்கு பல பணிகளை முன்கூட்டியே செய்யவேண்டியிருந்தது. மின்சாரக் கட்டணத்தை மறுசீரமைத்தல், பெற்றோலிய விலைகளை மறுசீரமைத்தல், மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதி செய்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துதல், பொது நிறுவனங்களை மறுசீரமைத்தல், சமூக பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க பணியாற்றுதல் மற்றும் பொது செலவினங்களைக் கட்டுப்படுத்துதல். பெற்றோலிய மற்றும் மின்சாரத்துறைகளில் போட்டித்தன்மையை விரிவுபடுத்துதல் போன்ற பல விடயங்களை முன்கூட்டியே செய்ய வேண்டியிருந்தது.

இலங்கை முன்கூட்டியே செய்திருக்க வேண்டிய அந்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உத்தரவாதக் கடிதத்தை நேற்று (நேற்றுமுன்தினம்) பெற்றோம். அதன்படி அன்றிரவே நானும் மத்திய வங்கி ஆளுநரும் இணக்கப்பாட்டுக் கடிதத்தில் கையொப்பமிட்டு சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பி வைத்தோம். இப்போது நமது கடமைகள் நிறைவடைந்துவிட்டன. இந்த மாத இறுதிக்குள், நான்காவது வாரமளவில், சர்வதேச நாணய நிதியம் தனது கடமையைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன். அதன்பிறகு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து முதலாம் கட்ட நிதி கிடைக்கும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு நிதியை உடன் விடுவியுங்கள்

## திறைசேரிச் செயலருக்கு நேற்றுக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
உள்ளூராட்சித் தேர்தல் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அதற்கு ஒதுக்கிய நிதியை விடுவிக்குமாறு திறைசேரியின் செயலருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றைய தினமே கடிதம் அனுப்பியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் கலந்துரையாடலுக்கு திறைசேரிச் செயலர் நேற்றையதினம் வரவில்லை. இதனால் தன்னிச்சையாக தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் திகதியைத் தீர்மானித்தது. இதனையடுத்து தேர்தலுக்கான நிதியை விடுவிக்கக் கோரும் கடிதம் நேற்றையதினமே தேர்தல்கள் ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

# திறைசேரி கைவிட்டால் 5 கட்டங்களாகத் தேர்தல்!

## ஆணைக்குழுவின் திட்டம் இது

கொழும்பு, மார்ச் 8
உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிப்பதில் திறைசேரி இழுத்தடிப்புக்களைச் செய்தால், கட்டம்கட்டமாக தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்ததாகப் பரிசீலிக்கும் என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.
மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், திறைசேரி நிதியை விடுவிக்காததை அடுத்து தேர்தல் பிற்போடப்பட்டது. இந்த நிலையில், ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கும் திறைசேரி இழுத்தடிப்புக்களைச் செய்தால், திறைசேரியின் இயலுமையைக் கருத்திற்கொண்டு 5 கட்டங்களாகத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு பரிசீலிக்கவுள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (அ-ம)

# தவறான முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு

யாழ், மார்ச் 8
இணுவில் கிழக்கு, மருனார்மடத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)


## இடிபாடுகள் விற்பனைக்குண்டு

கட்டட இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 959 2628

## உடனடி வேலைவாய்ப்பு

மகளிர் தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் இயங்கும் முன்னணி தனியார் நிறுவனமொன்றுக்கானது.

தகைமை :-
O/L கணிதம் உட்பட 6 பாடம் சித்தி.
குறிப்பு :-
A/L படித்து பரீட்சை எழுதியவர்கள், அரச ஓய்வாளர்கள் மற்றும் வீட்டு மனையாளர்கள். (வடமராட்சிக்கு உட்பட்டது)

077 028 3537

## வேலைவாய்ப்பு

- சந்தைப்படுத்தல் மற்றும் விருந்தினர் மண்டப (Banquet Hall) அனுபவம் வாய்ந்த முகாமையாளர்.
- அறை சுத்திகரிப்பாளர் (House Keeping)
- Hardware அனுபவம் வாய்ந்த உதவியாளர்
- ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 798 3933
071 417 2364

DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28
குறிப்பு: வேலையாட்கள் தேவை.



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
074 318 7263,076 436 5814

## மணப்பெண் தேவை

01. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1971. அனுசம். Bachelor of Electrical Engneering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 7428.
02. சாவகச்சேரி - மானிப்பாய். இந்து கௌரவகுலம் (V). 1979. சதயம். Bachelor Degree in English. USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 12030
03. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1982. அத்தம். Masters in Eletrical Engineering, USA Citizen, Divorce, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 24750
04. வேலணை மேற்கு. இந்து கௌர்வகுலம் (V). 1980. புனர்பூசம். MSC Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 8257
05. சுண்டிக்குளி - சித்தன்கேணி. இந்து கௌரவகுலம். 1971. ரேவதி. Dip in Criminology, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 31064
06. உடுவில். இந்து கௌரவகுலம் (V). 1964. உத்தரம். MBBS Doctor, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை .பதிவெண் : 29349
07. கோண்டாவில். இந்து கௌரவகுலம் (V). 1979. அவிட்டம். MSc, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை .பதிவெண் : 27123

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728
(CS 23776)(3/6)

## மாப்பிள்ளை தேவை

01. அனலைதீவு - வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of optometry, Australia Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் -32633.
02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1991. உத்தரம். Gradute, (Family Law, Lawyer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32297.
03. உரும்பிராய் - மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (V). 1991. புனர்பூசம். MBBS Doctor, Australia வில் வேலை செய்து கொண்டிருக்கும் USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32050.
04. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1992. உத்திரட்டாதி. ACCA Complited Accountant, Canada, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05. தெல்லிப்பளை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V).1993. அச்சுவினி. BSc Nursing Jaffna University, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1986, திருவாதிரை. MSc in IT and Charted Financial Analyst, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32904.
07. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1995. அத்தம், BSc, Post Graduate Dip Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
08. அல்வாய். இந்து. கௌரவகுலம் (V). 1987. பரணி. BSc (Hons) Chemical Engineering Technology, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1990. அச்சுவினி. BBA, Accountant, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 31884.
10. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1995. அவிட்டம். Masters of Bio Medical (UK), UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
11. காரைநகர் - பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1995. பூரம். BSc in Accounting and Finance, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
12. உடுவில் - இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மிருகசீரிடம். MBBS Doctor, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 32235.

(CS 23777)

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


## மரண அறிவித்தல்

பிறப்பு
02 . 02 . 1935



இறப்பு
07 . 03 . 2023

### திருநாவுக்கரசு இராஜேஸ்வரி

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் யாழ். நல்லூரை வசிப்பிடமாகவும், கொண்ட திருநாவுக்கரசு இராஜேஸ்வரி நேற்று (07.03.2023) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை கிருபரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து சுந்தரம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (புகைப்பட முதுபெரும்கலைஞர், கலாபூசணம், நாடகவியலாளர் மாமனிதர் S.T. அரசு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தருமரத்தினம் மற்றும் திருநாவுக்கரசு காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கலைவாணி (நூலகவியலாளர் P.H.D. யாழ். பல்கலைக்கழகம்) மற்றும் அரசகுமார் (பொறியியலாளர் - அமெரிக்கா), கலைச்செல்வி (முன்னைநாள் I.B.C. தமிழ் ஒலிபரப்பாளர் - லண்டன்), காலஞ்சென்ற இளங்கோ மற்றும் ஜீவறஜனி (ஆங்கில பட்டதாரி-நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேந்திரன் (லண்டன்), சர்வேந்திரா (கலாநிதி - நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லவன் (லண்டன்), மாயோன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கலா - 0044 772 586 5856

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 10911) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மெயில் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.